**Sangam**

ILANKAI TAMIL SANGAM, USA,

**ASSOCIATION OF TAMILS OF SRI LANKA IN THE USA**

நியூ யோர்க்,
ஐக்கிய அமெரிக்கா

15. 01. 09

திரு. தொல். திருமாவளவன்,
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி,
தமிழ்நாடு.

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அய்யா!

தமிழீழத் தமிழர்களுக்குத் துணிவையும், எதிர்காலம் பற்றிய அசையாத நம்பிக்கையையும் தரும் ஒரு தலைவனாக நீங்கள் என்றும் இருக்கின்றீர்கள்.

தமிழீழத் தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய கொள்கையில், வளைவுகளற்ற ஒரே நேர் கோட்டில் நீங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றீர்கள். ''தமிழீழம்'' என வரும் போது, கட்சிக்கும் அரசியலுக்கும் அப்பால் இனத்தின் சுய மரியாதையை முன்னிறுத்திய ஒரு எடுத்துக்காட்டாக நீங்கள் திகழ்கின்றீர்கள்.

எமக்காக உணவைத் துறக்கும் போராட்டத்தை ஆரம்பிக்கும் போது, எங்கள் இதயங்களிலே இமயத்திற்கு நிகரானவனாய் நீங்கள் அமர்கின்றீர்கள்.

உங்கள் உணர்வுக்கும், உறுதிக்கும் முன்னால், தமிழீழத் தமிழர்களின் சார்பில் அமெரிக்க இலங்கை தமிழ் சங்கத்தினராகிய நாங்கள் தலை தாழ்த்தி வணங்குகின்றோம்.

தமிழீழ மக்களுக்கு எதிராக இன்று முன்னெடுக்கப்படும் பெரும் போரில் இந்தியா ஆற்றுகின்ற பங்கு மிகப் பெரியது. இந்தியா நினைத்தால், போரை நிறுத்துவது மட்டுமல்லாது, தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் வழி செய்ய முடியும்.

இதை நீங்கள் தெளிவாக உணர்ந்துள்ளீர்கள் என்பதன் வெளிப்பாடு தான், உங்கள் உயிரையே பணயம் வைத்து நீங்கள் ஆரம்பித்துள்ள போராட்டம்.

இந்தப் போராட்டத்திலே வெற்றி பெற்று, தமிழர்களின் உரிமைகளைப் பெற்றெடுத்து, கம்பீர நடை போட்டு நீங்கள் எழுந்து வரவேண்டும்.

தூரத்தில் இருந்தாலும், உணர்வுகளால் நாம் உங்கள் அருகிலேயே அமர்ந்துள்ளோம்!

வாழ்த்துக்கள்!

அன்புடன்,

தனபாலசிங்கம் மணிவண்ணன்,
தலைவர்,
: President@Sangam.org
☎ :1 908 725 5270